# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி:044-2951 5590

**ஆணை நாள் – 02.04.2025**

**முன்னிலை**

**முனைவர் மா. செல்வராஜ், எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்கள்.SA.16380/F/2024 & CP.5719/F/2024**

திரு எம். செல்வம் -- மனுதாரர்

/எதிர்/

பொதுத்தகவல் அலுவலர் /
துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (பொது),
ஊராட்சி ஒன்றிய அலுவலகம், மேற்கு ஆரணி,
திருவண்ணாமலை மாவட்டம் - 632 301. -- பொது அதிகார அமைப்பு

பார்வை:

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 6(1)-ன்கீழ் மனுதாரர் மனு செய்த நாள் | 04.10.2024 |
| மனுதாரரின் மனு பிரிவு 6(3)-ன்கீழ் மாற்றப்பட்ட நாள் | 15.10.2024 & 25.11.2024 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 18.11.2024 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 14.12.2024 |
| மனுதாரரின் புகார் (CP) மனு நாள் | 28.11.2024 |

*******

**ஆணை**

இவ்வழக்குகள் இன்று (02.04.2025) இவ்வாணையத்தில் காணொளி காட்சி வாயிலான விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு எம். செல்வம் என்பவர் காணொளி காட்சி வாயிலாக ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திருமதி ப. மணிமேகலை, துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (பொது), ஊராட்சி ஒன்றிய அலுவலகம், மேற்கு ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம் என்பவர் ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ், திருவண்ணாமலை மாவட்டம், ஊரக வளர்ச்சி பிரிவு, மாவட்ட ஆட்சியரக அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், தங்களது துறையின் செயல்பாடுகள் மற்றும் பணிகள் குறித்து 4(1)(b)-ன்படியான முழு விவரங்கள், தங்களது

துறையில் பணிபுரியும் அதிகாரிகள் மற்றம் அலுவலர்களின் கடமைகள் மற்றும் பணிகள் குறித்து 4(1)(b)(ii)-ன்படியான முழு விவரங்கள் மற்றும் அவர்களின் ஊதியம் பற்றிய முழு விவரம், கடந்த 31.08.2024 தேதியிட்டு திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்ட தனது மனு தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கையின் முழு விவரம் உள்ளிட்ட முழு விவரங்களை மொத்தம் 37 இனங்களில் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் ஒரே பொருள் குறித்து, தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவிற்கு தகவல்கள் வழங்கப்படவில்லை எனபதால், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். அம்மனுவிற்கும் தகவல்கள் வழங்கப்படவில்லை என்பதால், மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் தனது இரண்டாவது மேல்முறையீட்டு மனு மற்றும் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 18(1)-ன்கீழ் புகார் மனு ஆகியவற்றினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அதனடிப்படையில், மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு மற்றும் புகார் மனு ஆகியவை இன்று (02.04.2025) ஒருசேர விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், தனது மனுவில் கோரியுள்ள தகவல்கள் குறித்து நாளதுவரையில் தனக்கு தகவல்கள் வழங்கப்படவில்லை என்று தெரிவித்தார்.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு தகவல்கள் வழங்கத் தயாராக இருப்பதாகத் தெரிவித்து, அதற்கான ந.க.வ.அ3/14/2024 நாள் 28.03.2025 தேதியிட்ட ஆவண நகல்களை இவ்வாணையத்தின் பார்வைக்கும் சமர்ப்பித்தார்.

6. இன்றைய விசாரணையின் முடிவில், கீழ்க்கண்ட உத்தரவு இவ்வாணையத்தால் பிறப்பிக்கப்படுகின்றன :-

- மேற்படி, மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1) மனுவில் கோரிய தகவல்களை மனுதாரருக்கு முழுமையாக '**தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி தகவல்கள் வழங்கப்படுகிறது**' என்ற முத்திரையுடன் ஒவ்வொரு பக்கத்திலும் சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற பதினைந்து நாட்களுக்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து, மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகலினை இவ்வாணையத்திற்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்பட்டு, மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு மற்றும் புகார் மனு ஆகியவற்றின் மீதான விசாரணையை இவ்வாணையம் இத்துடன் முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.

**ஒம்/- (மா. செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்கள்.SA.16380/F/2024 & CP.5719/F/2024</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**
பொதுத்தகவல் அலுவலர் /
துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ),
ஊராட்சி ஒன்றிய அலுவலகம், மேற்கு ஆரணி,
திருவண்ணாமலை மாவட்டம் - 632 301.

**<u>வழக்கு எண்கள்.SA.16380/F/2024 & CP.5719/F/2024</u>**
**<u>மனுதாரர்</u>**
திரு எம். செல்வம், த/பெ. முனுசாமி,
எண்.1169, K.M.A. நகர்,
பாரதிநகர் விரிவு, புதுப்பேட்டை,
கண்ணமங்கலம், ஆரணி தாலுக்கா,
திருவண்ணாமலை மாவட்டம் - 632 311.

Copy to: File (<u>SA.16380/F/2024 & CP.5719/F/2024</u>)
SNPS / 04.04.2025